# 5 குட்டித் தம்பியின் மந்திர வாக்கு

இந்த வருஷம் லீவு விட்டதும் தம்பியும், நானும், தாத்தாவும் கிராமத்துக்குப் போயிருந்தோம். எனக்கு வயசு ஏழு. மூன்றாவது படிக்கிறேன். தம்பி இன்னும் ஸ்கூலில் சேரவில்லை. நான் அண்ணன் என்றாலும் என் சொல் பேச்சைக் கேட்பதேயில்லை. எனக்கும் அதைப்பற்றி ஒன்றும் கவலையில்லை.

போனவுடனே தாத்தா வீட்டிலிருந்த பரணைக் கலைத்துப் போட்டோம். கண்ணாடி ஜாடியொன்றும் காலியான ஷூ பாலிஷ் டப்பாவொன்றும் எனக்கு கிடைத்தன. தம்பிக்கு ஒரு கதவின் பழைய கைப்பிடியும் பெரிய ஷூவொன்றும் கிடைத்தன. ஒரு பழைய தூண்டில் பரணில் கிடப்பதை நான் பார்த்து விட்டேன். உடனே ‘‘அது எனக்குத்தான்’’ என்று கூவினேன். தம்பியும் ‘‘அது என்னோடது’’ என்று உடனே சத்தம் போட்டான். தூண்டிலின் ஒரு முனையை நானும் மறுமுனையை அவனுமாகப் பிடித்துக் கொண்டு ஆளுக்கொரு பக்கமாய் இழுத்தோம். நான் மிகுந்த பலத்துடன் அதை இழுக்கவும் தம்பியால் சமாளிக்க முடியவில்லை. விட்டுவிட்டான்.



‘‘யாருக்கு வேணும் இந்தக் குச்சி? எங்கிட்ட இந்த பூட்ஸ் இருக்கே’’ என்றான் அவன்.

‘‘உம் பூட்ஸை வெச்சுட்டு நீயே கொஞ்சிக்க........ என்னோட தூண்டிய தொட்டாயா பாரு!’’

மீன் பிடிக்கச் செல்வதென்று முடிவு செய்த நான் தோட்டத்தில் மண் புழுக்களை சேகரிக்கத் தொடங்கினேன்.

தம்பி சமயலறைக்குச் சென்று பாட்டியிடம் தீப்பெட்டி வேண்டுமென்று கேட்டான்.

‘‘தீப்பெட்டி எதுக்கு?’’ பாட்டி கேட்டாள். ‘‘தோட்டத்துல தீ பத்த வெச்சு இந்த பூட்ஸை போட்டா அது உருகி ரப்பர் கெடைக்குமில்ல....’’ என்றான் தம்பி.

''அப்படியெல்லாம் நெருப்பு பத்த வெச்சு விளையாடறது ஆபத்தானது'' என்று பாட்டி புத்தி சொல்லி அனுப்பிவிட்டாள். பாவம்... தம்பிக்கு வேறென்ன செய்வதென்று புரியவில்லை. கைப்பிடியை ஒரு கயிற்றில் கட்டினான். அந்தக் கயிற்றின் இன்னோரு முனையில் பூட்ஸையும் கட்டிக்கொண்டு இழுத்துக் கொண்டு ஓடினான். தோட்டத்தில் இங்குமங்குமாக அவன் ஓடிக்கொண்டிருக்க பூட்சும் அவனோடு சேர்ந்து இழுபட்டுக் கொண்டிருந்தது.

நான் மண்புழு சேகரிப்பதைப் பார்த்துவிட்டுச் சொன்னான். ''நீ டைம் வேஸ்ட் பண்ணிக்கிட்டிருக்கே.... இன்னிக்கு எதையும் நீ புடிக்கப் போறதில்லை பாரு!''

''ஏன் புடிக்க முடியாது?''

''மீன் கெடைக்காம இருக்கிறதுக்கு நான் மந்திரம் போட்டுருவேனே''

''போடா, சும்மா பயங்காட்டாதே!''

மண் புழுக்களை எடுத்து ஒரு பெட்டியில் போட்டுக் கொண்டு வீட்டுக்குப் பின்னால் இருந்த குளத்திற்குப் போனேன். தூண்டிலில் ஒரு புழுவைக் கோத்து தண்ணீருக்குள் போட்டுவிட்டு, தூண்டிலின் அசைவையே கவனித்துக் கொண்டிருந்தேன்.

குட்டித் தம்பி எனக்குப் பின்னால் வந்து நின்றான். திடீரென்று உரத்த குரலில் சொல்ல ஆரம்பித்துவிட்டான்....

''மீனே... மீனே... தூரப்போ...
தூண்டிலை விட்டுத் தள்ளிப் போ...
புழுவைப் பாத்து வந்தாக்க...
பாழாப் போவ ஓடிப்போ...''



அவனிடம் நான் ஒன்றும் சொல்லுவதாய் இல்லை. எப்படியும் கத்திக் கொண்டேதான் இருப்பான். எனவே பேசாமல் இருந்து விட்டேன். கத்திச் சலித்த பிறகு அவன் அந்த பெரிய பூட்ஸைத் தூக்கி தண்ணீரில் எறிந்தான். கீழே கிடந்த சின்னச் சின்னக் கற்களைப் பொறுக்கி பூட்ஸின் மீது போட்டான்.


எனக்குப் பொறுக்க முடியவில்லை. ''இதபாரு.... ஒழுங்கா இங்கிருந்து போயிரு. நீ பண்ற கூத்துல மீனெல்லாம் பயந்து ஓடிருச்சு'' என்று நான் கத்தினேன்.

''உனக்கு ஒரு மீன் கூட கிடைக்காது......... நாந்தான் மீனுக்கு மந்திரம் போட்டுட்டேனே...'' சொல்லிக்கொண்டே அவன் தன் பூட்ஸைத் திரும்பவும் குளத்தில் தொப்பென்று போட்டான்.

ஆத்திரத்துடன் நான் ஒரு குச்சியை எடுத்தேன். அவ்வளவுதான். அவனுடைய பெரிய பூட்ஸ் தாறுமாறாய் அசைந்தோட அவன் ஓட்டம் பிடித்தான். என் கையில் சிக்காதது அவன் செய்த புண்ணியம் தான்.

மறுபடியும் நான் குளத்திற்கு வந்து மீன் பிடிக்கத் தொடங்கினேன். சூரியன் தலைக்கு நேராக வந்த பின்னாலும் கூட எனக்கு ஒரு மீன் கூட கிடைக்கவில்லை. மீன்களெல்லாம் எங்கே தான் போயின? தம்பியின் மீது கோபம் கோபமாய் வந்தது. அவன் மட்டும் கையில் சிக்கினால் அவன் தலையில் ணங் ணங்கென்று கொட்டு வைத்தால் தான் என் ஆத்திரம் அடங்கும். அவன் போட்ட மந்திரத்தில் எனக்கு நம்பிக்கை இல்லை என்றாலும், வெறுங்கையோடு திரும்பிப் போனால் அவன் கேலி செய்வானே என்று தயக்கமாய் இருந்தது. நானும் என்ன வெல்லாமோ செய்து பார்த்தேன். ஒன்றும் பலிக்கவில்லை. கடைசியில் வீட்டுக்குப் போவதென்று முடிவு செய்தேன். நல்ல பசி வேறு.

அப்போது வெளிக் கதவருகில் டம்டம்மென்று பயங்கரமாக ஏதோ சப்தம் கேட்டது. பக்கத்தில் சென்று பார்த்த போது தான் தெரிந்தது. தம்பிதான் அந்தக் கதவில் தான் கண்டெடுத்த கைப்பிடியை வைத்து ஆணியடித்துக் கொண்டிருக்கின்றான் என்பது. இந்த சுத்தியும் ஆணியும் எங்கிருந்து கிடைத்ததென்று தெரியவில்லை.



''எதுக்கு இப்ப கைப்பிடிய இங்க அடிக்கிற?'' என்னைப் பார்த்ததும் அவனுக்கு உற்சாகமாய் இருந்திருக்க வேண்டும். ''அடடே... மீன்காரன் வந்தாச்சா? எங்கே எவ்வளவு மீன் பிடிச்சே காட்டு பார்க்கலாம்...'' என்று கேட்டு கெக்கலித்தான்.

''இந்த கைப்பிடிய எதுக்கு இப்ப அடிக்கிற... அதான் முதலே ஒன்னு இருக்கே...''
''இருந்தா என்ன? ரெண்டா இருக்கட்டுமே... ஒன்னு கழண்டுடுச்சின்னு வெச்சுக்கோ... இது வேணுமே...''

கைப்பிடியை கதவில் பொருத்திய பிறகு அவனிடம் ஒரே ஒரு ஆணி மட்டும் மிச்சமாயிருந்தது. முதலில் அதை வேலியில் அடித்து விடலாம் என்று நினைத்தவனுக்கு வேறொரு எண்ணம் தோன்றியது. அந்தப் பெரிய பூட்ஸின் குதிகால் பகுதி கதவில் மேல் பக்கமாய் இருக்குமாறு வைத்து ஆணியை அடித்து விட்டான்.

‘‘இது எதுக்கு?’’
‘‘சும்மா’’
‘‘அறிவு கெட்டத்தனமா இருக்கு’’

இதற்குள் தாத்தா வந்துவிட்டார். தம்பிக்கு பயம். பூட்ஸை கதவிலிருந்து பிடுங்கப் பார்த்தான். ஆணி பலமாக அடிக்கப்பட்டு விட்டது. முடியாமல் போனதால் பூட்ஸை மறைத்துக் கொண்டு தம்பி நின்று கொண்டான்.

‘‘வந்த மொத நாளே வேலையெல்லாம் ஆரம்பிச்சிட்டீங்களா?... இது யாரு... கதவுக்கு இன்னொரு கைப்பிடி வெச்சது?’’
‘‘தம்பிதான் தாத்தா’’ நான் அவசரமாய் சொன்னேன்.

தொண்டையை செருமியபடியே தாத்தா சொன்னார். ‘‘பரவாயில்லையே... கதவுல இப்ப மேல ஒண்ணும் கீழ ஒண்ணுமா ரெண்டு கைப்பிடிகள். குள்ளமா யாராச்சு வந்தா அவங்க கீழ இருக்கிற கைப்பிடிய உபயோகிக்கலாம்.’’

கதவில் தொங்கிக் கொண்டிருந்த பூட்ஸை அவர் இப்போது பார்த்து விட்டார். ‘‘இதென்ன?’’ என்று கேட்டார்.

தம்பிக்கு பயத்தில் முகமெல்லாம் சிவந்து விட்டது. அவன் நன்றாக மாட்டிக் கொண்டு விட்டான் என்று எனக்குப் பட்டது.

‘‘இதென்ன தபால் பெட்டியா?’’ என்று தாத்தா கேட்டார். ‘‘தபாற்காரன் வரும் போது வீட்டில் யாரும் இல்லன்னா தபால்களை இதுல போட்ரலாமே... நல்ல யோசனைதான்’’ தாத்தா சொன்னவுடன் தம்பிக்கு சந்தோஷமாகி விட்டது.

‘‘நானும் அப்படி நெனச்சுத்தான் செஞ்சேன் தாத்தா...’’
‘‘உண்மையாகவா?’’
‘‘சத்தியமா’’
‘‘பரவாயில்லையே’’

சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது தம்பியின் புத்திசாலித்தனத்தை மெச்சிக் கொண்டிருந்தார். என்னிடம் அவர் கேட்டார். ‘‘காலையில இருந்து தம்பி எதெல்லாமோ பண்ணியிருக்கான் பாரு. நீ என்ன செஞ்சே?’’

‘‘நான் மீன் பிடிக்கப் போனேன் தாத்தா... ஆனா ஒரு மீன் கூட கெடக்கலே...’’
‘‘எங்கே போனே?’’
‘‘கொளத்துக்கு’’

‘‘அதான்... எப்படி மீன் கெடைக்கும்? இந்தக் குளம் இப்ப வெட்டினது. மீனெல்லாம் இன்னும் வரலே. நீ ஆத்துக்குப் போ. அந்த மரப்பாலத்துக்குப் பக்கத்துல, தண்ணி வேகமா ஓடும். அங்க நெறைய மீன் கெடைக்கும்.



தாத்தா மறுபடியும் வெளியில் போனதும் நான் தம்பியை அழைத்தேன். ‘‘தம்பி... வாடா ஆத்துல மீன் புடிக்கப் போகலாம்.’’
‘‘நீ என்ன நைஸ் பண்றியா?’’
‘‘எதுக்கு’’
‘‘நான் மந்திரம் போடாம இருக்கறதுக்கு!’’

‘‘எனக்கு அதப்பத்தியெல்லாம் கவலையில்ல. நீ வாரதுன்னா வா!’’
தூண்டில், மண்புழு, கண்ணாடி ஜாடி எல்லாவற்றையும் போட்டுக் கொண்டு நான் நடந்தேன். தம்பி பின்னாலேயே வந்தான்.

மரப்பாலத்துக்குப் பக்கத்தில் ஒரு நல்ல இடமாய்ப் பார்த்து தூண்டில் போட்டுக் கொண்டு உட்கார்ந்தேன். பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு தம்பி பாடிக்கொண்டே இருந்தான்.

‘‘மீனே... மீனே... தூரப்போ...
தூண்டிலை விட்டுத் தள்ளிப் போ...
புழுவைப் பாத்து வந்தாக்க...
பாழாப் போவ ஓடிப்போ...’’

நான் தக்கையையே பார்த்துக் கொண்டிருந்தேன்.
திடீரென்று தக்கை அசைந்தது. தூண்டிலை விழுக்கென்று மேலே இழுத்தேன். காற்றில் மின்னி அசைந்தது மீன். தூண்டிலிலிருந்து நழுவி புல்தரையில் விழுந்து துள்ளியது.

‘‘புடிறா அதை...’’ சத்தம் போட்டுக் கொண்டு தம்பி பாய்ந்தான். கையில் சிக்கிக் கொண்டு துள்ளியது. இதற்குள் ஜாடியில் தண்ணீரை நிரப்பிக் கொண்டேன். தம்பி மீனை ஜாடிக்குள் போட்டுக் கொண்டான்.

‘‘இது கெண்டை மீன்..’’ கூர்ந்து பார்த்து விட்டு அவன் சொன்னான். ‘‘கெண்டைதான்... எப்படி மின்னுது பாரு... இத நான் வெச்சுக்கட்டுமா?



‘‘சரி நீயே வெச்சுக்க... வா இன்னம் நெறைய புடிக்கலாம்.’’ வெகு நேரம் வரை அங்கேயே இருந்தோம். ஆறெழு கெண்டை மீன்களும், நான்கு கெளுத்திகளும், ஒரு சிறிய வால் மீனும் கிடைத்தன.

ஜாடிக்குள் நீந்தித் திரிந்த மீன்களைப் பார்த்துக் கொண்டே தம்பி உற்சாகமாய் நடந்தான். அந்த ஜாடியைத் தொடக்கூடவிடமாட்டேன் என்று அணைத்துக் கொண்டான்.
பாட்டியிடம் மீன்களைப் பெருமையுடன் அவன் காட்டிக்கொண்டிருந்த போது நான் கேட்டேன். ‘‘தம்பி... உன்னோட மந்திரமெல்லாம் ஒண்ணும் பலிக்கல பாத்தியா... எனக்கு அதுலயெல்லாம் நம்பிக்கை இல்ல’’

திரும்பிக் கூட பார்க்காமல் அவன் சொன்னான். ‘‘எனக்கு மட்டும் ரொம்ப நம்பிக்கை... போடா... நான் சொன்னதயெல்லாம் நம்பறதா இருந்தா நீ முட்டாளா இருக்கணும்... இல்லன்னா கெழவனா இருக்கணும்.’’

பாட்டி பொக்கை வாயைக் காட்டிக் கொண்டு சிரித்தார்கள்.

**நன்றி : மூலம் : ரஷ்ய மொழி**
**பிள்ளைத்தமிழ் மொழிபெயர்ப்புக் கதைகள்**
**ராதுகா பதிப்பகம்.**

## கிரகித்தல் பயிற்சி

1. அண்ணனும் தம்பியும் விடுமுறையைக்களிக்க யார் வீட்டுக்கு, எந்த ஊருக்குச் சென்றார்கள்.
2. குளத்தில் மீன் கிடைக்காமைக்கான காரணம் என்ன?
3. ஆற்றில் கிடைத்த மீன்கள் எவை?
4. தம்பியின் செயற்பாடுகளை தாத்தா எவ்வாறு பாராட்டினார்?
5. இக்கதையின் மையக்கருத்து என்ன?
6. இக்கதையிலிருந்து நீங்கள் பெறக் கூடிய படிப்பினைகள் எவை?

## மொழித்திறன் விருத்திச் செயற்பாடு

1. விடுமுறை காலத்தை நீங்கள் எப்படிக் களித்தீர்கள் என்பதை நீங்களே கூறுவதாக ஒரு கதையை எழுதி நண்பர்களுக்கு வாசித்துக் காட்டுங்கள்.
2. "பயண இலக்கியங்கள்" தொடர்பாக ஆசிரியருடன் கலந்துரையாடி தகவல்களைச் சேகரியுங்கள்.
3. "சமூகத்தில் நிலவும் மூட நம்பிக்கைகளை" குழுவாக இணைந்து சேகரித்து ஒரு ஒப்படையைத் தயாரியுங்கள்.

## மொழி வளம்

### இரட்டைக் கிளவி

ஓர் அடிச் சொல் இரட்டித்து நின்று பொருள் தருமிடத்து அது இரட்டைக்கிளவி எனப்படும் இரண்டு சொல் சேர்ந்து நின்று பொருள் தருவதைப் போல் பிரிந்து தனித்து பொருள் தராது. மொழிப்பாவனையில் அழகு தன்மையை கூட்டிக் கொள்ளவும் செய்யுள் இலக்கியங்களில் ஓசைச் சிறப்பை அதிகரித்துக் கொள்ளவும் இரட்டைக்கிளவி மிகையாக கையாளப்படுகின்றது.

1. கடகட
2. கடுகடு
3. மலமல
4. படபட
5. மடமட
6. கறகற
7. சலசல
8. கமகம
9. நெருநெரு
10. தகதக
11. குடுகுடு
12. தடதட
13. கலகல
14. கணகண
15. வளவள
16. தொண தொண
17. குபுகுபு
18. வழுவழு
19. விருவிரு
20. சுருசுரு
21. கொடுகொடு
22. பளபள
23. மணமண
24. தொலதொல
25. நெடுநெடு
26. குசுகுசு
27. கிலுகிலு
28. குணுகுணு
29. திடுதிடு
30. கிறுகிறு

**பயிற்சி**

*இரட்டைக் கிளவிச் சொற்களைப் பயன்படுத்தி பத்து வாக்கியங்கள் ஆக்குக.*

## இலக்கணம்

### வினைச் சொல்

பின்வரும் சொற்களை அவதானியுங்கள்

- வந்தான்
- வரைந்தான்
- படித்தான்
- சென்றான்
- நடந்தது
- ஓடியது
- விழுந்தன
- பிறந்தன

இவை வினைச் சொற்கள் என்பதை அறிவீர்கள்.

வினைச் சொற்கள் தனித்துவமான பண்புகளைக் கொண்டுள்ளன. இவ்வினைச் சொற்கள் செயலை உணர்த்தி காலத்தையும், திணை, பால், எண், இட விகுதிகளையும் -'அ'- -'உம்'- போன்ற பெயரெச்ச விகுதிகளையும் ஏற்று ஏவல் பொருளிலும் வினையடைகளைப் பெற்று வரும். வினைச் சொற்கள் வேற்றுமை உருபுகளை ஏற்பதில்லை. ஏற்றால் அது வினையாலணையும் பெயர் எனப்படும்.

**வினைச் சொல்**

**முற்றுவினை**

1. தெரிநிலை வினை / முற்று
2. குறிப்பு வினை / முற்று
3. ஏவல் வினை / முற்று
4. வியங்கோள் வினை / முற்று
5. உடன்பாட்டு வினை / முற்று
6. எதிர்மறை வினை / முற்று
7. தன்வினை
8. பிறவினை
9. செய்வினை
10. செயப்பாட்டு வினை
11. தனிவினை
12. கூட்டு வினை

**எச்சவினை**

1. வினையெச்சம்
2. பெயரெச்சம்

## முற்று வினை

முற்றுவினை, வினைமுற்று என்றும் சொல்வர். பிறிதொரு சொல்லை எஞ்சி நிற்காமல் தன்னளவில் பொருள் முடிவை உணர்த்தி நிற்கும் வினைச்சொல், முற்றுவினை அல்லது வினைமுற்று எனப்படும்.

**(உ + ம்) :-**

- படிப்பாள்
- படிக்கமாட்டாள்
- ஓடினான்
- ஓடுவாள்

முற்று - வினையை அதன் பொருள் அடிப்படையிலும் அமைப்பு அடிப்படையிலும் மூன்றாக வகைப்படுத்துவர்.

1. தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினைமுற்று
2. ஏவல் வினைமுற்று
3. வியங்கோள் வினைமுற்று